# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8093642

1. District : மாவட்டம் Namakkal. PS: காவல்நிலையம் V & AC Year: ஆண்டு 2020 FIR No.: மு.த.அ. எண் 02/AC/2020 Date: நாள் 08.10.2020
2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018. Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :
3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 1) A day after one week from 24.6.2020 2) A day about 20 days back 3) 7.10.2020 at about 12.30 Hrs.
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 8.10.2020 Time நேரம் 11.15 Hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 8.10.2020 Time நேரம் Vol. III.
4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer typed complaint.
5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் About 30 Kms South West.
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Village Administrative office, Veeranampalayam Village, Paramathi Velur Taluk.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்
6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Sekar @ G. Gunasekaran (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Ganesan
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு Age 32 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில் Private employee (g) Address : முகவரி Sooriyampalayam, Veeranampalayam Village, Paramathi Velur Taluk, Namakkal District.
7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   Tmt. Logambal, Village Administrative officer, Veeranampalayam Village, Paramathi Velur Taluk, Namakkal District.
8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

Submitted :

Details enclosed in separate sheet

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .......................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

8/10/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: [illegible]
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 8/10/2020
8.10.2020 at 12.00 Hrs

Name: பெயர் M. Nallammal, ..............................
Rank: நிலை ...................No. எண் .........
Inspector of Police
VAAC, Namakkal

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21 3 16(HCL-12)p 2

**நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.02/AC/2020 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவலறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...**

இன்று 08.10.2020-ஆம் தேதி வியாழக்கிழமை காலை 11.15 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் வட்டம், வீரணம்பாளையம் கிராமம், சூரியம்பாளையத்தில் வசிக்கும் திரு.கணேசன் என்பவரின் மகன் திரு.சேகர் என்கிற G.குணசேகரன் என்பவர் நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி எழுத்து மூலமான புகாரினை சமர்ப்பித்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புதல் திரு. சேகர் @ G.குணசேகரன் (வயது-32), த/பெ கணேசன், சூரியாம்பாளையம், வீரணம்பாளையம் கிராமம், பரமத்தி வேலூர் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம். பெறுதல் உயர்திரு. இன்ஸ்பெக்டர் அவர்கள், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நல்லிபாளையம், நாமக்கல். ஐயா, நான் வீரணம்பாளையத்தில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் பரமத்திவேலூரில் தக்காளி மொத்த வியாபாரியிடம் வேலை செய்கிறேன். நானும் எனது பக்கத்து வீட்டைச் சேர்ந்த சுந்தர் என்பவரும் திருமதி.குணவதி என்பவரிடமிருந்து வீரணம்பாளையம் பள்ளம்காட்டில் 5 சென்ட் வீட்டுமனை நிலத்தை தனித்தனியாக ஒவ்வொருவரும் 2½ சென்ட் வீதம் விலைக்கு வாங்கினோம். அதை கடந்த 24.06.2020-ம் தேதி எனது பெயரிலும், சுந்தர் மனைவி நீலாவதி பெயரிலும் தனித்தனியாக பரமத்தி சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரம் பதிவு செய்து கொண்டோம். பின்னர் சுமார் ஒருவாரம் கழித்து நானும், சுந்தரும் எங்களது கிரய பத்திரத்தினையும், பட்டா மாறுதலுக்காக பத்திரப் பதிவு அலுவலகத்தில் கொடுக்கப்பட்ட ரசீதையும் எடுத்துக் கொண்டு வீரணம்பாளையம் VAO அலுவலகம் சென்று VAO திருமதி.லோகாம்பாள் அவர்களிடம் கொடுத்தோம். அதை வாங்கிக் கொண்ட VAO திருமதி.லோகாம்பாள் அவர்கள் எங்கள் பெயரில் சப்டிவிசன் செய்து தனிப்பட்டா தருவோம் என்றும், அதற்கு ஒவ்வொருவருக்கும் ரூ.4,000/- செலவாகும் என்றும், நான் கேட்கும்போது கொடுக்க வேண்டும் என்றும் சொன்னார். பின்னர் சுமார் ஒரு மாதம் கழித்து வீரணம்பாளையம் VAO திருமதி.லோகாம்பாள் அவர்களும், சர்வேயரும் வந்து எங்களது நிலத்தை அளந்து சென்றனர். நான் தக்காளி லோடு ஏற்றி வருவது சம்மந்தமாக வெளியூர் சென்று வந்ததாலும், கொரோனா நோய் தொற்று ஊரடங்கு காரணமாகவும் நான் VAO அவர்களை பார்க்க செல்லவில்லை.

அவ்வப்போது சுந்தரிடம் பட்டா என்னாச்சு என்று பார்த்திங்களா என்று கேட்பேன், அவர் பைல் ரெடியான பின் சொல்வதாக VAO சொல்லியுள்ளதாக சொன்னார். அதன்பின்னர் கடந்த 20 நாட்களுக்கு முன் நான் VAO அலுவலகம் சென்று VAO திருமதி.லோகாம்பாள் அவர்களை பார்த்து பட்டா மாறுதல் உத்தரவு பற்றி கேட்டேன். அதற்கு VAO உங்க பைல் இன்னும் ரெடியாகவில்லை, ரெடியான பின் சுந்தரிடம் சொல்லியனுப்பறேன், நான் கேட்ட பணம் ஆளுக்கு ரூ.4,000/- கொண்டு வந்து கொடுங்க, பட்டா வாங்கிக்கலாம் என்று சொன்னார். நேற்று 07.10.2020-ம் தேதி காலை சுமார் 10.30 மணிக்கு சுந்தர் என்னிடம் போன் செய்து பட்டா உத்தரவு பைல் ரெடியாகிவிட்டதாக VAO சொன்னாங்க, அவர் கேட்ட ரூ.4,000/- பணம் கொண்டு வந்து கொடுக்கச் சொன்னாங்க, நீ போய் VAO-வை பார்த்திரு என்று சொன்னார். அதனால் நான் காலை சுமார் 12.00 மணிக்கு VAO அவர்களை அவருடைய செல்போன் எண்ணுக்கு தொடர்பு கொண்டு பேசினேன். அவர் ஆபீசுக்கு நேரில் வந்து பாருங்கள் என்று சொன்னார். அதனால் நான் நேற்று பகல் சுமார் 12.30 மணிக்கு வீரணம்பாளையம் VAO திருமதி.லோகாம்பாள் அவர்களை அவரது அலுவலகத்தில் பார்த்து என்னுடைய பட்டா மாறுதல் உத்தரவு குறித்து கேட்டேன். அதற்கு VAO அவர்கள் உங்க பைல் சர்வே செக்சன்ல ரெடியாகிவிட்டது நீங்களும், சுந்தரும் ஆளுக்கு ரூ.4,000/- கொடுத்தீங்கன்னா பட்டா மாறுதல் உத்தரவு வாங்கி வந்து கொடுத்து விடுகிறேன் .என்று சொன்னார். அதற்கு நான் ஏதும் குறைக்க முடியாதுங்களா என்று கேட்டேன். அதற்கு VAO அவர்கள் இதுவே மத்தவங்களுக்கு வாங்கறதவிட குறைவுதான், சுந்தருடையதையும் உங்களோடதையும் ஒரே பைலா ரெடி பண்றதால உங்களுக்கு செலவு குறைவுதான், தனித்தனி பைலா இருந்தா ஒவ்வொருத்தருக்கும் ரூ.6,000/-க்கு மேல் செலவாகும் என்று சொன்னார். மேலும் VAO அவர்கள் என்னிடம் கேட்ட ரூ.4,000/-ஐ தனியாக நேரில் வந்து கொடுத்துவிடும்படி சொன்னார். பின்னர் நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். வீரணம்பாளையம் VAO திருமதி.லோகாம்பாள் அவர்களுக்கு லஞ்சமாக ரூ.4,000/- பணம் கொடுத்து எனது வீட்டுமனை நிலத்திற்கு பட்டா மாறுதல் உத்தரவு பெற விருப்பமில்லை. என்னிடம் VAO அவர்கள் லஞ்சமாக கேட்ட ரூ.4,000/- பணத்துடன் VAO திருமதி.லோகாம்பாள் அவர்களை நான் இன்று சந்திக்க உள்ளேன். எனது வீட்டுமனை நிலத்திற்கு பட்டா மாறுதல் உத்தரவு வழங்க என்னிடம் ரூ.4,000/- லஞ்சம் கேட்ட திருமதி.லோகாம்பாள் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்-xxx- G.குணசேகரன்) 8/10/2020.

மேற்கண்ட புகார் மனுவை பெற்று, படித்துப்பார்த்து, புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளின் அடிப்படையில் கைது செய்யப்படக்கூடிய குற்றம் ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா என்றும், எதிரிக்கும், புகார்தாரருக்கும் தனிப்பட்ட முறையில் முன்விரோதம் உள்ளதா என்பது குறித்தும் இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருப்பதும், புகார்தாரருக்கும், எதிரிக்கும் முன்விரோதம் ஏதுமில்லை என்றும், புகார்தாரருடைய புகார் நம்பகத்தன்மை கொண்டது என்பதும் தெரிய வந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 08.10.2020-ஆம் தேதி காலை 11.30 மணிக்கு நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.02/AC/2020 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி மேற்படி எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர், நாமக்கல் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து, வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

8/10/2020

(M. நல்லம்மாள்)
காவல் ஆய்வாளர்,
ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல்.